

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 25.02.2026

# எது தேசியம் என்பதுதான் குழப்பம்!

“தமிழகத்தில் தேசியம் ஒருபோதும் வீழாது” என்று முழங்கி இருக்கிறார் மாண்புமிகு குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள். “யார் எத்தனை முயற்சிகள் செய்தாலும் தேசியம் தமிழ் மண்ணில் வீழாது” என்றும் பொடி வைத்துள்ளார் குடியரசுத் துணைத் தலைவர்.

**தேசியம் என்பதை இந்திய நாட்டின் மீதான பற்று என்ற அடிப்படையில் குடியரசுத் துணைத்தலைவர் அவர்கள் சொல்லி இருந்தால், ‘ஆமாம்! அந்த தேசியம் வீழாது’ என்பது உண்மைதான்.**

இந்தியாவின் விடுதலைப் போராட்டத்துக்கு மகத்தான பங்களிப்பைச் செலுத்திய மண் தமிழ் மண் ஆகும்.

இந்திய விடுதலைப் போராட்டத் தியாகிகளைப் போற்றிய அரசு திராவிட முன்னேற்றக் கழக அரசு.

**பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்கு கோட்டை. பாரதியின் இல்லம் அரசு இல்லம் ஆனது. பெருந்தலைவர் காமராசர் மணிமண்டபம். மூதறிஞர் இராஜாஜி நினைவாலயம். தில்லையாடி வள்ளியம்மாள் மணிமண்டபம். வீரவாஞ்சியின் உறவினருக்கு நிதி. வ.உ.சி. இழுத்த செக்கு நினைவு சின்னம் ஆனது. பசும்பொன் தேவருக்கு மணிமண்டபம். விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு இலவச பேருந்துப் பயணம். தியாகிகள் மணிமண்டபம். சுதந்திரப் பொன்விழா நினைவுச் சின்னம். பூலித்தேவன் நினைவு மண்டபம். தியாகி விஸ்வநாததாஸ் வாழ்ந்த இல்லம் புதுப்பிப்பு. மாவீரன் சுந்தரலிங்கம் வாரிசுகளுக்கு வீடு.**

**நேதாஜிக்கு சிலை. சிப்பாய் கலகத்துக்கு நினைவுத்தூண். இப்படி நாட்டுக்காக உழைத்த தியாகிகளைப் போற்றிய இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.**

இந்த வரிசையில் இன்றைய திராவிட மாடல் ஆட்சியிலும் தொடர்ந்து தியாகிகளைப் போற்றி வருகிறார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.

சுதந்திர தினத்தின் 75 ஆவது ஆண்டு பெருவிழா வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது. செக்கிழுத்த செம்மல் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரை பெருமைப்படுத்தும் வகையில் 13 அறிவிப்புகள் வெளியிடப்பட்டது. **வ.உ.சி. மறைந்த நவம்பர் 18 தியாகத் திருவுருவ நாளாக** அறிவிக்கப்பட்டுள்ளது. மகாகவி பாரதியார் மறைந்த நூற்றாண்டின் நினைவை முன்னிட்டு 14 அறிவிப்பு செய்யப்பட்டது. உத்திரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டை பராமரிக்கவும் புதுப்பிக்கவும் அரசு சார்பில் 18 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடிந்து ஒப்படைக்கப்பட்டது.

**கிண்டி காந்தி மண்டபத்தில் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவுருவச் சிலையும், மருது சகோதரர்கள் சிலையும் அமைக்கப்பட்டுள்ளது. கடலூர் அஞ்சலை அம்மாள் சிலை வைக்கப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்ட வீரர்களின் நினைவிடங்களில் ஒலி, ஒளி காட்சிகள் அமைத்திட நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

எனவே தேசியத் தலைவர்களைப் போற்றுவதில் தமிழ்நாடு எப்போதும் முன்னணியில் உள்ளது. இதனை தேசியம் என்று சொன்னால் அந்த தேசிய உணர்வு தமிழ் மண்ணில் பட்டுப்போகாது. ஆனால் மதவாதத்தை, பெரும்பான்மைவாதத்தை, ஒற்றையாட்சித் தன்மையை, எதேச்சதிகார உணர்வை அவர் தேசியம் என்றால் அந்த தேசியம் தமிழ் மண்ணில் முளைக்காது.

**தேசியம் என்ற பெயரால் ஒற்றை மொழியை இந்திய மொழி ஆக்க முடியாது. தேசியம் என்ற பெயரால் ஒற்றை மதத்தை இந்திய மதம் ஆக்க முடியாது. தேசியம் என்ற பெயரால் ஒற்றைப் பண்பாட்டை இந்தியப் பண்பாடு ஆக்க முடியாது. தேசியம் என்ற பெயரால் மாநிலங்களை ஒழித்து, ஒற்றையாட்சியை நிலைநிறுத்த முடியாது. ஒற்றை மொழி, ஒற்றை மதம், ஒற்றைப் பண்பாட்டை தேசியம் என்றால் அது தமிழ் மண்ணில் முளைக்காது.**

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யையே இத்தனை ஆண்டுகள் கழித்துத் தான் மாண்புமிகு சி.பி.ஆர். அவர்கள் பேசத் தொடங்கி இருக்கிறார்கள். இப்போதுதான் இவர்கள் வ.உ.சி.யைப் படிக்கத் தொடங்கி இருக்கிறார்கள். தியாகி வ.உ.சி.யை முழுமையாகப் படியுங்கள்.

சுயமரியாதைச் சமூகநீதிக்காக 1917 ஆம் ஆண்டு குரல் கொடுத்தவர் வ.உ.சிதம்பரனார் அவர்கள். சீர்திருத்த எண்ணம் கொண்டவர்களால் தொடங்கப்பட்ட சென்னை மாகாண சங்கத்தை உருவாக்கியவர். இதில் தான் வ.உ.சி.யுடன் பெரியாரும் இயங்கினார். 1920 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடந்த 26 ஆவது சென்னை மாநில அரசியல் மாநாட்டில், வகுப்புவாரி உரிமைத் தீர்மானத்தை வ.உ.சி. அவர்கள் கொண்டு வந்தார்கள்.

**‘வகுப்புவாரி உரிமையானது நாட்டில் உள்ள ஒற்றுமையின்மை யையும் பகைமையையும் குறைக்கவல்லது’ என்கிறார் வ.உ.சி.’ நமது தேசத்தில் நிலவும் பிறப்பை ஆதாரமாகக் கொண்ட அநியாயமான ஜாதி வேற்றுமைகளையும் உயர்வு தாழ்வுகளையும் கடுமையாக நான் எதிர்க்கிறேன்’ என்றார்.**

1936 நவம்பர் 18 ஆம் நாள் வ.உ.சி. மறைகிறார். அதே ஆண்டு மே 3 ஆம் நாள் அன்று திருச்சியில் பார்ப்பனரல்லாதார் மாநாடு நடக்கிறது. அது தொடர்பாக அனைவர்க்கும் ஒரு வேண்டுகோள் கடிதம் அனுப்புகிறார் வ.உ.சி.

**“பார்ப்பனரல்லாச் சகோதரர்களே! சாதி வேற்றுமை, மத வேற்றுமை, கட்சி வேற்றுமை, கோட்பாடு வேற்றுமை முதலியவற்றையெல்லாம் விடுத்து நீங்களெல்லாம் ஒன்று சேர்ந்து பார்ப்பனரல்லாதார்கள் சமூகத்தை முன்னிலைக்கும் தன்னிலைக்கும் கொண்டு வருவீர்களாக. உங்கள் அன்புள்ள வ.உ.சிதம்பரம் பிள்ளை”** என்பதுதான் வ.உ.சி. விடுத்த வெளிப்படையான குரல். இதுதான் கப்பலோட்டிய தமிழனின் இறுதிக் குரல்.

**அனைவரையும் உள்ளடக்கிய, யாரையும் புறக்கணிக்காமல், யாரையும் உயர்த்தாமல், தாழ்த்தாமல் எல்லார்க்கும் எல்லாம் என்பதுதான் தமிழ் மண்ணில் தளைக்க வேண்டும் என்று விரும்பியவர் வீர சிதம்பரனார். அதனால்தான் எதிர்மறைச் சிந்தனைகள் தமிழ் மண்ணில் முளைப்பது இல்லை.**

---

### குமரியில்

# அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா வளைவு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.2.2026) கன்னியாகுமரி நகராட்சியில் 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளிவிழா நினைவு அலங்கார வளைவினை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர் த.மனோ தங்கராஜ், விஜய் வசந்த் எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ்குமார், திருமதி தாரகை கத்பட், பிரின்ஸ், சட்டமன்றப் பேரவை முன்னாள் தலைவர் ஆவுடையப்பன், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் சுரேஷ்ராஜன், முன்னாள் எம்.எல்.ஏ.ஆஸ்டின், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர். அழகு மீனா, மேயர் ஆர்.மகேஷ், உள்ளாட்சி அமைப்புகளின் பிரநிதிதிகள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

**குமரி, பிப். 25 -**

**குமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா வளைவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று பிற்பகல் திறந்து வைத்து சிறப்பித்தார்!**

தமிழ்நாடு முழுவதும் மாவட்ட வாரியாக கள ஆய்வு மேற்கொண்டு வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இரண்டு நாட்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொள்கிறார்.

இதற்காக சென்னையிலிருந்து விமானம் மூலம் தூத்துக்குடி சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விமான நிலையத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

சபாநாயகர் அப்பாவு, அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கீதா ஜீவன், அனிதா ராதாகிருஷ்ணன், மனோ தங்கராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் சண்முகையா, மார்க்கண்டேயன், ராஜா, முன்னாள் சபாநாயகர் ஆவுடையப்பன், தூத்துக்குடி மேயர் ஜெகன் பெரியசாமி, நாகர்கோவில் மேயர் மகேஷ், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!

கன்னியாகுமரி செல்லும் வழியில் திருநெல்வேலியில் முதலமைச்சரை பொதுமக்களும், தி.மு.க.வினரும் திரண்டு வந்து வரவேற்றனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாகனத்திலிருந்து இறங்கி பொதுமக்களை சந்தித்துப் பேசினார்.

இதனைத்தொடர்ந்து கன்னியாகுமரி செல்லும் வழியில், நெல்லை மேற்கு மற்றும் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் பாளையங்கோட்டை கேடிசி நகரில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆவுடையப்பன், மாவட்டக் கழகப் பொறுப்பாளர் அப்துல் வகாப் ஆகியோர் தலைமையில் தி.மு.க. வினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். பொதுமக்களும், தி.மு.க.வினரும் திரண்டுவந்து முதலமைச்சரை வரவேற்றனர்.

அப்போது, வாகனத்திலிருந்து இறங்கி பொதுமக்களை சந்தித்துப் பேசினார்.

இதுபோன்று நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பணகுடி நான்கு வழிச்சாலையில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கிரகாம்பெல் தலைமையில் முதலமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

கன்னியாகுமரியில் விருந்தினர் மாளிகை அருகில் 1 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் பேரறிவுச் சிலையின் வெள்ளி விழா நினைவு வளைவை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து நேற்று மாலை புத்தளம் கல்லடிவிளை பகுதியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழுஉருவச் சிலை மற்றும் முதல்வர் படைப்பகத்தையும் திறந்து வைத்தார்.

தொடர்ந்து, நாகர்கோவில் வேப்பமூடு சந்திப்பில் உள்ள சர் சி.பி. ராமசாமி ஐயர் நினைவு பூங்காவில், 50 இலட்சம் ரூபாய் செலவில் தியாகி பொன்னப்ப நாடார் சிலையையும் முதல்வர் அவர்கள் திறந்து வைத்தார்.

### இன்று, அரசு விழாவில் நல உதவிகள் வழங்குகிறார் முதல்வர்!

இன்று, நாகர்கோவில் கன் கார்டியா பள்ளி மைதானத்தில் நடைபெறும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்கும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், பல கோடி ரூபாய் மதிப்பிலான நிறைவு பெற்ற திட்டங்களை திறந்து வைத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

---

### கல்வியில் சிறந்த தமிழ்நாடு

# புதிய உயரங்களை அடைவதில் பெருமிதம் கொள்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, பிப். 25 -**

**கல்வியில் சிறந்த தமிழ்நாடு - புதிய உயரங்களை அடைவதில் பெருமிதம் கொள்வோம் என்று ஐ.ஐ.டி.யில் நுழைவதற்கான முதற்படியை அரசு மற்றும் மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் வெற்றிகரமாகக் கடந்துள்ளது குறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள் (Tamil Nadu Model Schools): கல்வியில் சிறந்த தமிழ்நாடு புதிய உயரங்களை அடைவதில் பெருமிதம் கொள்வோம்!

கல்வியால் சிறக்கும் நமது அரசுப் பள்ளி மாணவர்களைச் செய்தித்தாள்களின் முதல் பக்கத்தில் இடம்பெற வைத்துப் பூரிப்படைகிறோம்.

2021-2022இல் கல்வியில் பின்தங்கிய 10 மாவட்டங்களில் தொடங்கப்பட்ட மாடல் பள்ளிகள், இன்று 38 மாவட்டங்களிலும், தலா ரூ.50 கோடி மதிப்பீட்டில் 800 மாணவர்களுக்கான உறைவிட, உட்கட்டமைப்பு வசதிகளுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

அதனால்தான், கடந்த 4 ஆண்டுகளில் அரசு மற்றும் அரசு மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த 2,358 மாணவர்களும், ஆதி திராவிடர் (37) மற்றும் பழங்குடியினர் (169) பள்ளிகளைச் சேர்ந்த 206 மாணவர்களும், 93 முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில், 50 துறைகளில் மேற்படிப்பு பயிலுகின்றனர். அதில் 41 பேர் IIT களிலும், 22 பேர் முழு உதவித் தொகையுடன் வெளிநாடுகளிலும் பயில்கின்றனர்.

இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு ஐ.ஐ.டி.யில் நுழைவதற்கான முதற்படியை அரசு மற்றும் மாதிரிப் பள்ளிகளைச் சேர்ந்த 448 மாணவர்களும் ஆதி திராவிடர் (13) மற்றும் பழங்குடியினர் (55) பள்ளிகளைச் சேர்ந்த 68 மாணவர்களும் வெற்றிகரமாகக் கடந்துள்ளனர்.

பெரும்பாலும் முதல் தலைமுறையினராகக் கல்விச் சாலைக்குள் நுழைந்த இந்த மாணவர்களின் கனவுகளை அடைவதற்குத் துணை நிற்கின்ற பெருமையோடு, இவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு இன்னும் பலர் கல்வியைக் கைப்பற்றிக் கொண்டு, உன்னதமான உயரங்களை வாழ்வில் அடைந்திட வாழ்த்துகிறோம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில், நேற்று (24.2.2026) பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக தூத்துக்குடியிலிருந்து கன்னியாகுமரி செல்லும் வழியில், பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.